இலங்கை பரீட்சைத் திணைக்களம்

க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை – 2026

2026 க.பொ.த. (சா.தர)ப் பரீட்சை 2026.12.08 ஆம் திகதி தொடக்கம் 2026.12.17ஆம் திகதி வரை நடைபெறும் என இத்தால் அறியத்தரப்படுகின்றது.

இப்பரீட்சைக்குத் தோற்றும் பாடசாலை விண்ணப்பதாரிகளின் அனுமதி அட்டைகள் உரிய பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன், சகல பாடசாலை விண்ணப்பதாரிகளும் தங்களது அனுமதி அட்டைகளை அதிபரிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும். தனிப்பட்ட விண்ணப்பதாரிகளின் அனுமதி அட்டைகள் அவர்களின் தனிப்பட்ட முகவரிக்கும் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

தபால் மூலம் இதுவரையும் அனுமதி அட்டைகள் கிடைக்கப் பெறாத தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் 2026.11.23 ஆம் திகதியிலிருந்து www.doenets.lk பரீட்சைத் திணைக்கத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்திற்குள் பிரவேசித்து தமது அனுமதி அட்டைகளை பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

அனுமதி அட்டை கிடைக்கப்பெறாத அல்லது அனுமதி அட்டையை தரவிறக்கம் செய்ய முடியாத தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தங்களால் விண்ணப்பிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தின் பிரதி, பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்கான பற்றுச்சீட்டின் நிழற்பிரதி அல்லது பரீட்சைக் கட்டணம் செலுத்தியமைக்காக அஞ்சல் அதிபரினால் உறுதிப்படுத்திப் பெற்றுக்கொண்ட கடிதத்துடன் பரீட்சைத் திணைக்களத்திற்கு வருகைதரல் வேண்டும்.

அனுமதி அட்டையில் திருத்தங்கள் செய்தல்

பாடசாலை விண்ணப்பதாரிக்கோ, தனிப்பட்ட விண்ணப்பதாரிக்கோ கிடைக்கப்பெற்றுள்ள அனுமதி அட்டையில் பாடம், மொழிமூலம், பெயர் ஆகியவற்றில் திருத்தங்கள் இருப்பின்,

- ❖ சகல திருத்தங்களையும் பாடசாலை விண்ணப்பதாரிகள் அதிபர் ஊடாகவும், தனிப்பட்ட விண்ணப்பதாரிகள் தாமாகவும் நிகழ்நிலையில் மேற்கொள்வதுடன், அதற்காக https://onlineexams.gov.lk இணையதளத்தினுள் பிரவேசிக்க வேண்டும்.
- ❖ ஒவ்வொரு விண்ணப்பதாரிக்கும் மேற்படி திருத்தங்களை மேற்கொள்ள ஒரு சந்தர்ப்பம் வழங்கப்படும். இப்பரீட்சைக்குரிய பரீட்சை நிலையங்களை மாற்றம் செய்ய முடியாது.
- ❖ திருத்தங்களை மேற்கொள்ளும் செயற்பாடுகள் 2026.11.19 ஆம் திகதி தொடக்கம் 2026.11.30 ஆம் திகதி நள்ளிரவு 12.00 மணியுடன் நிறைவடைகிறது.

கவனிக்கவும் : விண்ணப்பதாரர்கள் தத்தமது பெயர்களில் திருத்தம் செய்ய வேண்டியிருப்பின் பரீட்சைக்கு முன்னர் வழங்கப்பட்ட காலப்பகுதிக்குள் நிகழ்நிலையில் அத் திருத்தங்களை மேற்கொள்வது கட்டாயமாவதுடன், பரீட்சைக்குப் பின்னர் எக்காரணம் கொண்டும் பெயர் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட மாட்டாது.

பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை உறுதிப்படுத்திக்கொள்வதற்காக ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச்சீட்டு அல்லது செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம் இப்பரீட்சைக்குச் செல்லுபடியான ஆளடையாள அட்டையாக ஏற்றுக்கொள்ளப்படும்.

1. ஒரு பரீட்சார்த்திக்குப் பதிலாக வேறொருவர் தோற்றுதல், குறிப்புகளை தம்வசம் வைத்துக்கொண்டு விடையளித்தல், மற்றைய பரீட்சார்த்திகளின் உதவியைப் பெறுதல், உதவியளித்தல், பரீட்சை மண்டபத்திலும் அதற்கு வெளியிலும் முறைகேடாக நடந்து கொள்ளல் என்பன பொதுப் பரீட்சைகள் சட்டத்துக்கமைய தண்டனைக்குரிய குற்றமாகும்.
2. இப்பரீட்சையில் கணித்தற் பொறிகள், அழிமை (Correction Fluid) என்பவற்றை உபயோகிப்பதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.
3. தற்போது ஏதாவது அரசாங்கப் பாடசாலையில் கல்வி கற்கும் ஒருவர் தனிப்பட்ட பரீட்சார்த்தியாக பரீட்சைக்குத் தோற்றுதல் தண்டனைக்குரிய குற்றமாகும்.
4. பரீட்சை மண்டபத்திற்குள் கையடக்கத் தொலைபேசி, ஸ்மார்ட் கைக்கடிகாரம், இலத்திரனியல் உபகரணங்களை எடுத்துச்செல்லுதல், தம்வசம் வைத்திருத்தல், பயன்படுத்துதல் என்பன முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. இவ்விதிகளை மீறிச்செல்வோர் 5 வருடங்களுக்குப் பரீட்சை தண்டணைக்குட்படுவர் என்பதுடன் அவ்வாறான கருவிகள் பறிமுதல் செய்யப்படும்.
5. பரீட்சார்த்திகள் Bluetooth போன்ற இலத்திரனியல் உபகரணங்கள்/ கருவிகள் (Electronic Communication Devices) பயன்படுத்தாதிருப்பதை உறுதி செய்யும் பொருட்டு பரீட்சை மண்டபத்தில் பரீட்சை நேரம் முழுவதும் தமது முகமும் இரு காதுகளும் திறந்தபடி தெளிவாகத் தெரியுமாறு இருத்தல் வேண்டும். அவ்வாறு செயற்படாத பரீட்சார்த்திகள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

விசாரணைகள் :- தொலைபேசி எண் : 011 - 2784537, 2784208, 2786616,
உடனடி அழைப்பு : 1911
தொலைநகல் இலக்கம் : 011 - 2784422
மின்னஞ்சல் முகவரி : gceolexamsl@gmail.com
தபால் முகவரி : பரீட்சை ஆணையாளர் நாயகம், பாடசாலைப் பரீட்சைகள் ஒழுங்கமைப்பு, பெறுபேற்றுக் கிளை, பெலவத்தை, பத்தரமுல்ல.

6/4/OL/2026
இலங்கை பரீட்சைத் திணைக்களம்
பெலவத்த, பத்தரமுல்ல
2026.11.23ஆம் திகதி

ஏ.கே.எஸ். இந்திகா குமாரி லியனகே
பரீட்சை ஆணையாளர் நாயகம்